2. தகவல் கோரல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு பெரிய மானியக் கோரிக்கை. வேறு எதுவும் எடுப்பதாக இல்லை. (குறுக்கீடு) எல்லாமே முக்கியமான பிரச்சினைதான்.

3. கவன ஈர்ப்பு

மொடக்குறிச்சி வட்டம், ஓடாநிலை கிராமம், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியில் ஓடாநிலை என்னும் கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் கட்டாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், 30-4-2002 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2002-2003 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது தீரன் சின்னமலை அவர்களுக்கு பிறந்தநாள் விழா நடத்துவதற்கும், மண்டபம் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்த விவாதத்திற்கு, "மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற உறுதிமொழியினை அளித்தார்கள்.

மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில், தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து விரிவான அறிக்கை அனுப்புமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 4-10-2002 அன்று கேட்டுக்கொள்ளப்பட்டார். அதனைத் தொடர்ந்து 10-2-2003 அன்று சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடைபெற்ற உறுதிமொழிக் கூட்டத்தில் உறுதிமொழிக் குழுத் தலைவர் அவர்கள் தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவது குறித்து, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் குழு அமைக்குமாறும், அதில் மக்கள் பிரதிநிதிகளையும், மணிமண்டபம் அமைக்க விழைவு கொண்டு முன்வரும் ஆர்வலர்களையும் சேர்த்து மண்டபம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார். மேலும் ஆர்வலர்கள் வழங்கும் நன்கொடைத் தொகைகளையும் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் 14-2-2003 அன்று அறிவுறுத்தப்பட்டார்.

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு வட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலை என்ற இடத்தில் தீரன் சின்னமலை நினைவாக மணிமண்டபம் அமைப்பது தொடர்பாக தற்போது அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார்கள். அதன்படி ஈரோடு வட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலை என்ற இடத்தில் புல எண் 1289/13-ல் தீரன் சின்னமலை வழிபட்டதாகக் கூறப்படுகின்ற கோயில் உள்ளது என்றும், மேற்படி கோயிலை ஒட்டி வடபுறம் அமைந்துள்ள பட்டா நிலங்களான ரீச. எண் 1282/1, 2, 3, 1289/1 முதல் 7 வரை உள்ள மொத்தம் 3.38 ஏக்கர் நிலம் மணிமண்டபம் கட்டவும், விழா எடுக்கவும் தேவைப்படும் நிலங்களெனத் தீரன் சின்னமலை நற்பணி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளதாகவும், மேலும் தங்கள் மன்றத்தால் ரூபாய் 3 இலட்சம் முதல் ரூபாய் 4 இலட்சம் வரை நிதி திரட்டித் தர இயலும் என 19-12-2002 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் தெரிவித்ததாகவும் அதன்பிறகு மேற்படி தீரன் சின்னமலை நற்பணி மன்ற உறுப்பினர்களிடமிருந்து எந்தவித பதிலும் இதுவரை பெறப்படவில்லையெனத் தெரிவித்துள்ளார். மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில், தீரன் சின்னமலை மணிமண்டபம் அமைப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ள ஈரோடு வட்டம், ஓடாநிலை என்ற இடத்தில் உள்ள நிலம் ரீச. எண் 1282/1, 2, 3 மற்றும் 1289/1 முதல் 7 வரை உள்ள 3.38 ஏக்கர் நிலத்தின் தற்போதைய

மதிப்பு சுமார் ரூ.6,06,360/- எனவும், மேலும் இவ்விடத்தில் உள்ள 57 தென்னை மரங்களின் தற்போதைய மதிப்பு சுமார் ரூ.2,85,000/- எனவும் இச்செலவினத்தையும் நிலமதிப்புடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். மேலும் தீரன் சின்னமலை மணிமண்டபம் கட்ட நற்பணி மன்றத்தாரால் தேர்வு செய்யப்பட்ட புலங்களுக்கு நிலமதிப்பு ரூ.6,06,360/- எனவும் இத்துடன் மணிமண்டபக் கட்டுமானச் செலவு ரூ.25.00 இலட்சம் சேர்த்தால் சுமார் ரூ.31.00 இலட்சம் தேவைப்படும் என்ற விவரத்தினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, அரசு உறுதிமொழிக் குழு தெரிவித்துள்ளபடி, தீரன் சின்னமலை மணிமண்டபம் அமைப்பது குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைத்து, அதனடிப்படையில், அறிக்கையினை 1 மாத காலத்திற்குள் அனுப்புமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் 20-3-2003 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டார். அதனடிப்படையில் 18 நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் மணிமண்டபம் அமைப்பது தொடர்பான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் 3-4-2003 தேதியிட்ட கடிதத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை பெறப்பட்டதும், மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். தீரன் சின்னமலை அவர்கள், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியில் ஓடாநிலை என்னும் கிராமத்தில் கோட்டை கட்டி, கொங்கு வேளாளர் இளைஞர்களைத் திரட்டி வெள்ளையனை எதிர்த்து 1801-1802 மற்றும் 1804 ஆம் ஆண்டுகளில் போரிட்டு, வெற்றிபெற்ற சூழ்நிலையில், 31-7-1805 ஆம் ஆண்டு சங்ககிரிக் கோட்டையில் வீர மரணம் எய்தினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு கரூரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு தீரன் சின்னமலை மாவட்டம் என்று பெயர்சூட்டி பெருமை சேர்த்தார்கள். சென்னையில் தீரன் சின்னமலை அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கித் தந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் தெய்வப்புலவர் திருவள்ளுவர்

2003 ஏப்ரல் 29] [திரு. கே.எஸ். தென்னரசு]

பெருமகனாருக்கு மாவட்டம் தொடங்கி, பல்கலைக்கழகம் துவங்கிய தாயே! பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக அறிவித்து மாவட்டந்தோறும் விழா எடுத்த தாயே! அண்மையில் நெல்லை மாவட்ட வளர்ச்சிப் பணிகளைத் தொடக்கி வைத்து, கப்பலோட்டிய தமிழன் என்று அனைவராலும் போற்றப்பட்ட வ.உ.சி.க்கு 75 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிய தாயே! 12-2-2002 அன்று ஈரோட்டில் நடந்த அரசு நலத் திட்ட விழாவில் சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையிலே சின்னமலையாக விளங்கிய தீரன் சின்னமலையினுடைய புகழைப் பெருமையுடன் மனதாரப் பாராட்டிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் மனதில் நீங்காத இடம்பெற்ற தீரன் சின்னமலைக்கு மொடக்குறிச்சி தொகுதி ஓடாநிலை என்னும் கிராமத்தில் மணிமண்டபம் கட்டுவதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தை இலவசமாகக் கொடுப்பதற்கு தேவசேனாபதியும் ஜெயராமன் ஆகியோர்கள் முன்வந்துள்ளார்கள். இதனைப் பரிசீலித்து இந்த ஆண்டு அந்த இடத்தில் மணிமண்டபம் கட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஆலோசனையின்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிக்கை பெறப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.